செ.வெ.எண்: 215 **பத்திரிக்கை செய்தி** நாள்: 31/03/2020

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கொரோனா நோய் தொற்றை தடுக்கும் பொருட்டு, ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளதால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1000/- ரொக்கமாக நிவாரணம் வழங்கப்படும் என்றும், ஏப்ரல் மாதத்திற்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், அவர்களின் குடும்ப அட்டைக்கு தகுதியான அளவு அரிசி, துவரம்பருப்பு, சர்க்கரை மற்றும் பாமாயில் ஆகியவை விலையின்றி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். இத்திட்டமானது, 02.04.2020 முதல் தொடங்கி 15.04.2020க்குள் அனைத்து நியாயவிலைக்கடைகள் மூலமாக செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார். இதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 1185 நியாயவிலைக்கடைகளில் உள்ள 652648 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000/- விதம் (ரூ.65,26,48,000/-(ரூபாய் அறுபத்தைந்து கோடியே இருபத்தாறு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையானது, தொடர்புடைய நியாயவிலைக்கடைகளின் மூலம் விநியோகம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது 02.04.2020ல் தொடங்கி 15.04.2020 வரை ஒவ்வொரு நாளும் அடையாள அட்டை (Token) முறையில் 100 நபர்களுக்கு அந்தந்த நியாய விலைக்கடைகளின் மூலம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் அரிசிபெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும். எனவே, பொதுமக்கள், ஒரே நேரத்தில் நியாயவிலைக்கடைகளுக்கு வருவதை தவிர்த்து, அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் மட்டும் நியாயவிலைக்கடைக்கு சென்று தங்களுக்குரிய நிவாரணத்தொகை ரூ.1000/- மற்றும் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுச்செல்லவும் இதன் மூலம் சமூக இடைவெளியை கடைப்பிடித்திடவும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், கும்பகோணம் மாதப்பா தெருவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர் வசிக்கும் பகுதி மற்றும் அதை உள்ளடக்கிய அருகு வார்டுகளில் நேரடியாக பொதுமக்களுக்கு நியாய விலை பொருட்களை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.